# Tamil Nadu Bishops' Council (TNBC)
## Tamil Nadu Latin Bishops' Council (TNLBC)
TNLBC Secretariat | 22/45, Santhome High Road | Chennai - 600 004 | Tamil Nadu | India
T : 044-24611949 | P : 97512 08059 | E : tnbctnlbc@gmail.com | Web : www.tnbc.in


**மணிப்பூரில் நிகழும் வன்முறை!**

**தமிழக ஆயர் பேரவையின் அறிக்கை**

இந்தியாவின் வடகிழக்கில் அமைந்துள்ள மிகச்சிறிய மணிப்பூர் மாநிலம் கடந்த இரு மாதங்களாய் வன்முறையால் பற்றி எரிகிறது. நூற்றுக்குமேல் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். வீடுகள், குடியிருப்புக்கள், உடமைகள் எரிக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 300 தேவாலயங்கள் திட்டமிட்டுத் தாக்கப்பட்டுள்ளன. புனிதப்பொருட்கள், சுரூபங்கள் சூறையாடப்பட்டுள்ளன. உயிருக்கு அஞ்சி, ஊர்களிலிருந்து இடம் பெயர்ந்து, காடுகளிலும், முகாம்களிலும் ஏறத்தாழ 50,000 மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். கடந்த மே 3-ம் நாள் பழங்குடி மாணவரமைப்பு ஊர்வலம் நடத்திய அன்று வெடித்த வன்முறை 50 நாட்கள் கடந்து இன்றும் தொடர்கிறது.

**'மெய்தி' இனத்தவரின் கோரிக்கை**

மணிப்பூரில் 53% 'மெய்தி' (Meiti) இனத்தவரும், 41% 'குகி' (Kuki), 'மிசோ'(Mizo) மற்றும் 'நாகா'(Naga) போன்ற பழங்குடிகளும் வாழ்கின்றனர். பெரும்பாலும் 'மெய்தி' இனத்தவர் சமவெளிகளிலும், பழங்குடியினர் மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றனர். அடிப்படையில் 'மெய்தி' இனத்தவர் சமூக, அரசியல், பொருளாதார வலிமை பெற்றுள்ளனர். பழங்குடிகளோ சற்றுப் பின்தங்கியவர்கள். ஆனால் தங்களையும் பழங்குடிப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென 'மெய்தி'கள் போராடி வருகின்றனர்.

**உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பாணை**

இச்சூழலில், மெய்தி சமூகத்தினரைப் பழங்குடிப் பட்டியலில் சேர்ப்பதற்கான அறிக்கையை ஒன்றிய அரசுக்கு அளிக்க வேண்டுமெனக் கடந்த 19.04.2023 அன்று, மணிப்பூர் உயர் நீதிமன்றம் மாநில அரசுக்கு உத்தரவிட்டது. இம்முடிவு தங்களின் நிலம் மற்றும் உரிமைகளைப் பறிக்குமென பழங்குடியினர் அஞ்சினர். அதற்காகப் பழங்குடிகள் ஊர்வலம் நடத்திய போதே கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர்; சிலர் கொல்லப்பட்டனர். குறிப்பாகத் தலைநகர் இம்பால் மற்றும் 'மெய்தி' மக்கள் செறிவாக வாழும் பகுதிகளிலிருந்து 'குகி' இனத்தவர் வேட்டையாடப்பட்டுள்ளனர். அதுபோலவே 'குகி' இனத்தவர் செறிவாக வாழும் கிராமங்களிலிருந்தும் 'மெய்தி' இனத்தவர் உயிர் தப்பி ஓடியுள்ளனர். இருதரப்பிலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். கிராமங்கள் சூறையாடப்பட்டுள்ளன. பலர் உயிருக்கு அஞ்சி, தங்கள் வீடு, வாசலைத் துறந்து முகாம்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர். தற்காலிக முகாம்களில் அடிப்படை வசதிகளின்றி, மக்கள் அலைமோதுகின்றனர். பலர் மிசோராம் போன்ற அண்டை மாநிலங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். குறிப்பாகக் கல்வி பயிலும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அன்றாட வாழ்க்கைக்கான உணவு, மருந்துப் பொருட்கள் உட்பட அனைத்திற்கும் கடும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.




PRESIDENT
Most Rev. Dr. George Antonysamy
Archbishop of Madras-Mylapore
Archbishop's House, No. 41,
Santhome High Road, Chennai - 600 004
Tel : 044 2461102, 24640833
Email : abpmmsec@gmail.com

VICE PRESIDENT
Most Rev. Dr. Lawrence Pius
Bishop of Dharmapuri
Bishop's House, Post Box 32,
Gundalapatty Medu, Dharmapuri- 636701,
Ph : 04342-2288409
Email : dharmapuridiocese@gmail.com

SECRETARY
Most Rev. Dr. Nazarene Soosai
Bishop of Kottar
Bishop's House, P.B. No. 17, Nagercoil
Kanyakumar Dt.- 629 001.
Tel : 04652-278343, 279152
Email : kottardiocese@yahoo.co.in

TREASURER
Most Rev. Dr. S. Antonysamy
Bishop of Palayamkottai
Catholic Bishop's House,
Post Box 108, Palayamkottai,
Tirunelveli - 627011,
Tel : 0462-2522114,
Email : palayamkottaidiocese.org

**கிறித்தவர்கள் மீது திட்டமிட்ட தாக்குதல்கள்**

மேலோட்டமாகப் பாத்தால் மணிப்பூர் கலவரம், இரண்டு இனக் குழுக்களிடையிலான முரண்பாடு எனத் தோன்றலாம் ஆனால், அது முழு உண்மையல்ல. நிகழும் வன்முறையில் 'குகி' இனக் கிறித்தவ மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தவிர, மாநிலத்தின் பல பகுதிகளிலும் கிறித்தவத் தேவாலயங்கள் குறி வைத்துத் தாக்கப்பட்டுள்ளன, மற்றும் எரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, 'மெய்தி' இன மக்கள் வாழும் பகுதிகளிலும் கிறித்தவ ஆலயங்கள் தாக்கப்பட்டுள்ளன. எனவே, பல்லாண்டுகளாய்க் கிறித்தவர்களுக்கு எதிராகச் செயல்பட்டு வந்த சில குழுக்கள், இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கிறித்தவர்களையும், ஆலயங்களையும் குறி வைப்பதாகவே செய்திகள் தெரிவிக்கின்றன. பல இடங்களில் காவல்துறையும், இராணுவமும் கலகக்காரர்களை ஒடுக்கத் தவறியுள்ளன. அரசு எந்திரமும், சட்டத்தின் ஆட்சியும் முற்றிலும் செயலிழந்து நிற்கின்றன. இரு மாதங்களாய் வன்முறை தொடர்வதைக் காணும்போது, இவை அனைத்தும் முன்பே திட்டமிட்டவை என்றே தோன்றுகிறது.

**அனைத்து மணிப்பூர் மக்களின் அவலம்**

மதங்கள், இனங்களைக் கடந்து, மாந்த நேயப் பார்வையில் மணிப்பூர் மக்கள் அனைவரின் துயரங்கள், சொல்லி மாளாதவை. குறிப்பாகப் பெண்கள், குழந்தைகள், உடல் நலமற்றோர், முதியோர் இவர்களின் காயங்களும் கண்ணீரும் உலகின் மனசாட்சியை உலுக்குவதாய் உள்ளன. இத்தனை ஆண்டுகளாய் அவர்கள் கட்டி எழுப்பிய வாழ்வையும், வீடு-வாசலையும், வாழ்வாதாரங்களையும், ஆலயங்களையும் மீண்டும் காணப் பல்லாண்டுகள் ஆகலாம். அதற்கு அமைதியும், சமூக நல்லிணக்கமும் அடிப்படை. குறிப்பாகக் குழந்தைகள், இளைஞர்களின் எதிர்காலம் முற்றிலும் இருண்டு கிடக்கிறது.

**குடிமக்களான நம் எதிர்பார்ப்பு**

மத்திய மாநில அரசுகள் விரைவாகச் செயல்பட்டு, வன்முறையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அரசு இனியும் காலம் தாழ்த்தினால், அது இந்திய வரலாற்றில் நீங்காத கறையாக அமையும். அதனையும் தாண்டி, சனநாயகம், சமயச்சார்பின்மை, இந்நாட்டின் பன்முகத்தன்மை இவற்றை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். மக்களின் உயிருக்கும், உடமைக்கும், அமைதியான வாழ்வுக்கும் அரசு பொறுப்பேற்று அரசியல் சாசனக் கடமையாற்ற வேண்டும். மணிப்பூரில் சமூக நல்லிணக்கத்தை கட்டி எழுப்ப, அனைத்துத் தரப்பினரும் உறுதியேற்க வேண்டும். அம்மக்களின் அடிப்படை உரிமைகள் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும். அதற்கு அரசியல் அமைப்புகளும், சமூக அமைப்புகளும் தம் கடமையாற்ற வேண்டும்.

**நம் பரிந்துரைகள்!**

மேற்கண்ட சூழலில், மணிப்பூர் மக்களுக்கு நமது உடனிருப்பையும் தோழமையையும் உறுதி செய்யும் வகையில் கீழ்க்கண்டவாறு நாம் செயல்படலாம்:

1. பங்குகளிலும், நிறுவனங்களிலும், துறவற இல்லங்களிலும் துன்புறும் மணிப்பூர் மக்களுக்காகச் சிறப்பாக மன்றாடுவோம். திருமணி ஆராதனை, சிறப்பு வழிபாடு இவற்றில் அவர்களின் துயரம் தீரவும், அமைதி திரும்பவும் நாம் இணைந்து செபிப்போம். ஒவ்வொரு மறைமாவட்டமும் **இதற்கென ஒரு செப-நாள் (Prayer Day) குறிப்பது** அனைவருக்கும் ஏதுவாக அமையும்.
2. எதிர்வரும் ஜூலை 2-ம் நாள், ஞாயிறு அன்று தமிழகமெங்கும் **அமைதிப் பேரணி** (Silent Procession), **மெழுகுதிரிப் பேரணி** (Candle Procession), போன்ற சமூகச் செயல்பாடுகள்

மூலம், மணிப்பூர் மக்களின் துயரங்களை நாம் உணர்ந்திடவும், பிறருக்கு உணர்த்திடவும் முயல்வோம். அது பரந்துபட்ட சமூகத்திற்கு அமைதி மற்றும் **சமூக நல்லிணக்கத்தின் செய்தி**யாக அமைய வேண்டும்.

3. இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் மக்களிடையே அமைதியும் சமூக நல்லிணக்கமும் தழைத்திட, நமது பங்குகளிலும், பள்ளிகள், கல்லூரிகள் மற்ற அனைத்து நிறுவனங்களிலும் சிறப்பாக ஜூலை 2-ம் நாள் ஞாயிறு அன்று ஒரு குறிப்பிட்ட நேரத்தைக் குறித்து ஒருபடித்தான, சமயச்சார்பற்ற **சமூக நல்லிணக்க உறுதிமொழி** (Oath of Social Harmony) ஏற்போம்.
4. சமூக அமைப்புகள், இயக்கங்கள், தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசமைப்புச் சட்டத்தின் உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டுமெனக் கோரி, ஒன்றிய அரசுக்கும், மாண்புமிகு பிரதமருக்கும், மணிப்பூர் முதல்வருக்கும் நம் கோரிக்கைகளை **மடல்களால்** (Memorandum) முன்மொழிவோம்.
5. கட்சி அரசியலுக்கு அப்பால், சனநாயகம் மற்றும் சமயச்சார்பின்மை இவற்றில் நம்பிக்கைக் கொண்ட அமைப்புகளுடன், மற்றும் தனிநபர்களுடன் இணைந்து, மணிப்பூரில் அமைதியும், ஒற்றுமையும் திரும்புவதற்குத் தேவையான சமூகக் கடமைகளை நாம் ஆற்ற முயல்வோம். சமூக நல்லிணக்கத்தை இலக்காகக் கொண்டு இவற்றை ஒவ்வொரு மறைமாவட்டமும் திட்டமிடலாம்.
6. **சிறப்புத் திட்டம்** (Special Educational Scheme) ஒன்றை உருவாக்கி பாதிக்கப்பட்ட மணிப்பூர் மக்களுக்கும், குறிப்பாக கல்வி பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் நமது நிறுவனங்களின் மூலம் இயன்ற வழிகளில் நாம் உதவிட முயல்வோம்.
7. மணிப்பூர் மக்களின் உடனடித் துயர் துடைக்க, நம்மாலான **பொருளாதார உதவிகளைச்** செய்ய முயல்வோம். அப்பணியில் பங்களிப்புச் செய்ய விரும்புவோர் தமிழ்நாடு பல்நோக்கு சமூகப்பணி இயக்குனரைத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். அதற்குரிய வழிமுறைகளை அவர் தெரிவிப்பார். தொடர்புக்கு: *Email: tasoss.trichy@gmail.com. Cell: 9443687710*

வரலாற்றின் இறைவன் அன்பின் வழியாகவே அகிலத்தை வழிநடத்துகிறார் என்பதை நாம் உணர்வோம்! சிலுவை வழியாகவே மீட்பு வருகிறது என்பதை மணிப்பூர் மக்களின் பாடுகள் நமக்கு உணர்த்துகின்றன. அவர்களின் துயரங்களில் நாம் பங்கேற்று, அவர் தம் கண்ணீரும் கவலையும், இறையருளால் முடிவுக்கு வர வேண்டுமென உருக்கமாய் செபிப்போம். இறைவனில் நம்பிக்கை கொள்வோம். மக்களின் வாழ்வில் அமைதியும், இயல்பான சூழலும் விரைவில் ஏற்பட வேண்டுமென இறைவனின் தாய் அன்னை மரியாளின் பரிந்துரைகளை நாம் நாடுவோம். உயிர்ப்பின் இறைவன் மணிப்பூர் மக்கள் அனைவருக்கும் தம் அமைதியையும் அன்பையும் அருள்வாராக!

இயேசுவில் அன்புடன்,

24.06.2023

+ George Antonysamy

TAMILNADU BISHOP'S COUNCIL
President
Chennai-600 004

மேதகு பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி
தலைவர், தமிழக ஆயர் பேரவை